**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 59 of 2020

Depositions of PW - 1 witness for ________ Prosecution / Defence / Court

Name : அண்ணாமலை
Father's Name : த/பெ. கணபதி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of November 2022.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாப்பம்பட்டி பிரிவில் வசித்து ஒர்க்சாப் வைத்து நடத்தி வருகிறேன்.

2. கடந்த 05.11.2019 ம் தேதியன்று என்னுடைய வீட்டிற்கு முன்னர் உள்ள காலி இடத்தில் எப்பொழுதும் நிறுத்துவது போல் என்னுடைய ஆம்னி வேன் பதிவெண் 1073 யை நிறுத்திவிட்டு சென்று விட்டு மறுநாள் காலை 5 மணிக்கு நடைபயிற்சி செய்வதற்காக எழுந்து வந்து பார்த்தபோது என்னுடைய வாகனத்தை காணவில்லை.

3. வண்டியை காணவில்லை என்று அருகில் இருந்தவர்களிடம் 2,3 நாட்கள் விசாரித்து பார்த்தேன். அப்பொழுதும் வண்டி கிடைக்காததால் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகாரானது நான்

அளித்ததாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதாகும். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. அதன்பின்னர் 18 ம் தேதியன்று எங்களுடைய வாகனத்தை கண்டுபிடித்ததாக கூறியதன் பெயரில் அதனை அடையாளம் காண்பித்தேன். நீதிமன்றத்தின் மூலம் என்னுடைய வாகனத்தை திரும்ப பெற்று கொண்டேன். இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வாகனத்தை எடுத்து வந்துள்ளேன். **(புகைப்படங்கள் 3 எண்ணிக்கையிலானவை அ.சா.ஆ.2 வரிசையாக ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. புகாரினை நான் எழுத வில்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் எழுதினார். எனக்-கு அவ்வளவு படிப்பு அறிவு கிடையாது. புகாரானத எனக்கு படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் ஆமாம். புகாரில் அடையாளம் நபர்காளல் திருடப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னனை வாகனத்தை திருப்பி கொடுக்கும்பொழுது 18 ம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

2. என்னுடைய வீட்டிலிருந்து காவல் நிலையத்தை வாகன்த்தில் வந்ததால் 8 நிமிடங்களுக்குள் வந்துவிடலாம். 5 ம் தேதி வண்டியை காணவில்லை என்று தேடி பார்த்து 6 ம் தேதியன்று புகார் கொடுத்தேன். புகார் அளிக்கும் பொழுது என்னுடைய வாகனத்திற்குரிய ஆவணங்களை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என்னுடைய வாகனம் திருடு போகவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.11.09 16:49:49 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**

**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 59 of 2020

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : செந்தில்குமார்
Father's Name : த/பெ. அண்ணாமலை
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of November 2022.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாப்பம்பட்டி பிரிவில் வசித்து ஒர்க்சாப் வைத்துள்ளேன்.

2. கடந்த 05.11.2019 ம் தேதியன்று என்னுடைய தந்தை எங்களுக்குள் சொந்தமான ஆம்னி வேனை எங்கள் வீட்டிற்கு முன்னர் நிறுத்தியிருந்தார். மறுநாள் காலை 06.11.2019 காலை 5 மணிக்கு என்னுடைய தந்தை நடைப்பயிற்சி செல்வதற்கு எழுந்து பார்த்தபொழுது வாகனத்தை காணவில்லை என்றும் நான் எங்காவது எடுத்து சென்றேனா என்றும் அல்லது வேறு யாருக்காவது வாகனத்தை கொடுத்தேனா என்றும் என்னிடம் வினவினார்.

3. அதற்கு நான் இல்லை என்று கூறவும் மேலும் வாகனத்திற்குரிய 2 சாவிகளையும் எடுத்து அவரிடம் கொடுத்தபின்னர் வண்டியை காணவில்லை என்று கூறி அக்கம் பக்கம் விசாரித்து விட்டு காவல் நிலையத்தில் 12 ம் தேதி மதியம் 2 மணிக்கு புாகர் அளித்தோம்.

அதன்பின்னர் 18 ம் தேதியன்று காலை 9 மணியளவில் எங்களுடைய வாகனத்தை கண்டுபிடித்து விட்டதாகவும் வந்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினார்கள். அதன்பெயரில் என்னுடைய தந்தைய அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்று எங்களுடைய வாகன பதிவெண் டிஎன் 37 சிஇசட் 1073 னை அடையாளம் காண்பித்தோம். வாகனத்தை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பபெற்று கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. எங்களுடைய வீடானது கீழ் தளம் மற்றும் மேல் தளம் அடங்கிய வீடு என்றால் சரிதான். கீழ் தளம் மற்றும் மேல் தளத்திற்காகன கேட் கதவுகள் பூட்டப்பபட்டு சாவி வீட்டினுள் இருக்கும் என்றால் சரிதான். நடைபயிற்சிக்கு சென்று விட்டு வந்தபின்னர் வாகனம் குறித்து என் தந்தை என்னிடம் வினவினார். முதல் விசாரணையில் கூறிய விபரங்களை தான் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாகனம் காணமால் போனது குறித்து யார் யாரிடம் விசாரித்தேன் என்றால் உறவினர்களான நடராஜன் மற்றும் கோவிந்தராஜிடம் விசாரித்தேன்.

2. மேற்படி இருவரும் போனில் தகவல் கொடுக்கவும் நேரடியாக வந்து விட்டார்கள். அவர்கள் 6 ம் தேதி காலை 6 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டார்கள். எங்கள் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு 8 நிமிடங்களுக்குள் அடைந்து விட கூடியதாக என் தந்தை சாட்சியம் அளித்துள்ள நிலையில் 06 லிருந்து 10 தேதிகளுக்குள் புகார் கொடுக்கவில்லை என்றால் புகார் அளித்தோம். காவல் துறையினர் சிறிது காலம் காத்திருக்குமாறு கூறினார்கள். புகாரினை நான் தான் எழுதினேன்.

3. புகாரில் வாகனத்தை அடையாளம் தெரியாத நபர்களால் திருடப்பபட்டது என்று குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரினை நான் எழுதவில்லை என்றாலும் அவ்வாறு எழுதியிருக்கும் பட்சத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அசா.1 என்னுடைய அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2022.11.09 16:49:57 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**